# சண்முகாநந்த தோத்திரப்பாமாலை



அரக்கோணம் :

வைத்தியராஜ். சொ. வேலாயுத நாயனர். இயற்றியது.

ஓம் :
குகமயம்

771

# சண்முகாநந்த

# தோத்திரப் பாமாலை

★

அரக்கோணம் சுவால்பேட்டை
வைத்தியராஜ் — சொ. வேலாயுத நாயனர்
இயற்றியது.

★

## திருவள்ளுவர் நிலையம்
அரக்கோணம்.

1956.

உரிமை ஆசிரியருக்கே. விலை 0—4—0

# சாற்றுக் கவி

இந்நூலாசிரியரின் போதகாசிரியராகிய
துரைப்பெரும் பாக்கம் வித்வான் ஜெயதேவ உபாத்தியாயர்
அவர்கள் செய்த

## சிறப்புப் பாயிரம்

---

**நிலைமண்டில ஆசிரியப்பா.**

செந்திரு மகளின் திருவருள் பெருகி
சுந்தர மிலகும் தொண்டை மண்டலத்தில்
பண்புசேர் காவிரிப் பாக்க நாடதனில்
வண்மையாய்ப் பலநல வளங்களு மிலகும்
துரைப் பெரும் பாக்கச் சுகுண சாத்மீக
மறையருள் புரிந்த மாதானு பங்கியின்
திறமிகு மரபு செழிக்க வந்துதித்த
இறை யெனும் சொக்க இலிங்க நாயனர்
இங்கில மதனில் இழைத்த மாதவத்தால்
மன்னிய சிறப்புடன் வந்தவதரித்தோன்
வித்துவ சிரோன்மணி வேலாயுதப் பெயர்
பெற்றதோர் கவிஞன் பேருலகதனில்
சண்முகக் கடவுளின் தாளடி போற்றிப்
பன்னிசை நவரசப் பாவகையதனல்
கன்னலும் பாலும் கற்கண்டு சுவையும்
என்னப் பாமாலை யியற்றிச் சூடினனே.

777



அரக்கோணம் :

**வைத்தியராஜ். சொ. வேலாயுத நாயனர், அவர்கள்.**

கணபதி துணை

ஸ்ரீ குகமயம்

# சண்முகாநந்த தோத்திரப் பாமாலை

## காப்பு

சீர்புகழும் நற்றணிகை தேவன்மிசை யான்மகிழ்ந்து
பேர்புகழும் தோத்திரப்பா பேசுதற்குப்-பார்புகழும்
கந்தருக்கு முன்பிறந்த கற்பகமே உந்தனிருச்
சுந்தரப் பொற்பாதம் துணை.

## சிவஸ்துதி—உமையவள் துதி

நீரணி நுதலு நீலகண்டமு முடைய ஆதிக்
காரணவஸ்து வானக்கர்த்தனைப் பணிந்து போற்றி
நாரணி கௌரி இந்த நானிலந் துதிக்கு மாதா
வாரணியுமைய வட்டதன் மலரடிபணிகுவோமே.

## சமையாசாரிகள் துதி

சம்பந்தர் அப்பர் மேலாம் தண்டமிழ் வாதவூரர்
இம்மையின் வினையறுக்கும் இணையிலா சுந்தரேசர்
மும்மலவாதை நீக்கும் முனிவர்கள் யோகர் சித்தர்
செம்மை நற்கமலம் போன்றசேவடிபணிகுவோமே.

## திருமால் துதி

பதுமமலர்ச் சீர் நயனன் பாற்கடலாள் தன்கணவன்
துதிசெய் திருத்தொண்டர்த் தொண்டன்—அதிகபுகழ்
கொண்ட திரு மால்தனது கோதரவிளங்கிடுநற்
புண்டரீகத் தாளடிகள் போற்றி.

## சாரதை துதி

வெண்டா மரைப்பொகுட்டில் வீற்றிருக்கும் என்னம்மை
பண்டாய் தமிழ்க்கருளும் பாவைநல்லாள்-துண்டுமதி
நன்னுதலாள் நாற்கரத்தாள் நான்முகத்தோன் நாயகியாள்
கன்னியெனும் வாரணியின்ருள் காப்பு.

## துரைப்பெரும்பாக்கம் உமை செல்வி
## கிராமதேவி துதி

### கட்டளைக் கலித்துறை

நரைதிரை மூப்புடன் நம்முளைத்தீவினை நாசமுற
தரைமிகு பூதமும் பேயுடன் தீயன சாய்த்துவிடும்
சிறைப்படு துன்பமும் தீவிலங்குற்றன தீய்த்துவிடும்
துரைப் பெரும் பாக்கத் துமைசெல்வியம்மைத்
துணையடியே.

### அரக்கோணம் கிராமதேவதை துதி.

அரக்கோண மாம்பதியில் அன்னையென யார்க்கும்
வரங்கோடி ஈந்தருளும் மாதா—உருக்கமுடன்
செம்மையன்பர் ஏத்திசிற்கும் திண்டோளி சாணுத்தி
அம்மை எமக் குன்ருள் அருள்.

### குரு வணக்கம்

அயனுதிவான வருமுனிவர்களுமாசி தருமருட் கவிஞராய்
நயமோடு பாவலர்கள் புகழ்துரைப்பெரும் பாக்க
நன்னகரில்வாழ்
ஜெயதேவதாசரெனும் பெயர்பூண்ட பாவணர் சீரடிகளைப்
ப்யமாறயேத்தி நலம்பெறவேண்டியிப்புவியில்
பணிவாமரோ.

## அவையடக்கம்.

உதிக்கின்ற கதிரோன் முன்னே ஒளிதரு தீபம்போலும்
கொதிக்கின்ற அரியின்முன்னே குருவியினிரைச்சல்
போலும்
கதிக்கின்ற கவிவல்லோர் முன் கான்முளை
பிதற்றிவிட்டேன்
இதற்பிழை யுண்டேயானல் எழில் மனம் பொருத்தாட்
கொள்வீர்.

## இந்நூல் செய்தகாலம்

### ஆசிரிய விருத்தம்

கலியுகமையாயிரத்து மூவைந்தினில்
கருது மானந்தவருடம்
கனமானவிடைமாதம் இருபத்திரெண்டினில்
கனகன்தன் வாரமதனில்
நிலையான வளர்பிறை ஏகாதசித்திதி
நேர்மையுறு சித்திரையினுள்
நிறைசித்தயோகமன்றுதயாதி பத்தின்மேல்
நேசமிகு கடகலக்னம்
மலைவாழும் குறவர்குல வள்ளிமகிழ் தேவன்மேல்
வாசபாமாலை தன்னை
வந்தித்து சூடினுன் வட ஆர்க்காடதைச் சார்ந்த
வளம்பெருகு மேல்விஷாரம்
தலையான வைத்ய ஐயாசாமி நாயனர்
தனையனும் சொங்கலிங்கம்
தனித்தவத்தால் வந்த வேலாயுதப் புலவன்
தரணிமிசை என்னுளுமே.

# பஞ்சரத்தினப் பாமாலை

## மாணிக்கம்

சீர்கொள் மாணிக்கமுயர் தெய்வானை வள்ளி மகிழ்
திவ்விய மாணிக்கமென்ன
செப்புமாணிக்கமுல கொப்புமாணிக்க மென
திகழுமாணிக்கவடிவேல்
கூர்கொள் மாணிக்கமயிலேர் கொள் மாணிக்கமருள்
கொஞ்சு மாணிக்க முத்தி
கூடுதரு மாணிக்க மறிந்தவர்கள் புத்தியில்
குலவு மாணிக்க நீயே
ஏர்கொள் மாணிக்கமருள் பேர்கொள் மாணிக்கமென
இன்பமாய் நின்ற சீலா
எனையாளவே வருக உமைபாலனே எங்கும்
ஏகனாய் நின்ற வேலா
பார்கொள் மாணிக்கமெனும் தணிகை மாநகரில் வாழ்
பண்பு மாணிக்க மலையே
பண்ணவர்கள் மிகவாழ்த்த மன்னவர்கள் தொழு
பாலகுமரக் கடவுளே. [தேத்தும்

## வயிரம்

அடல்வயிரமென்னத் துதிப்பவர்கள் சிந்தையில்
அருள் வயிரமாகி நின்று
அனல்வயிர மாகிநற் சரவணப் பொய்கையில்
அமர்ந்ததிரு வயிரமாகும்
திடவயிர மசுரரை செயிக்க வடிவேல் கொண்டு
சென்றமுழு வயிரமன்பர்
செபிக்கு முன்வந்து தாண்டவம் செய்யும் வயிரமே
சேயனென் முன் வந்தருள்

மடவயிர மருணகிரி நாதனது துயர்தீர
வந்தருள் செய்த மெய்யா
மலர்க் கையனே ஏழை எனதைய்யனே உந்தன்
மைந்தன் நான் புவியிலுய்ய
படவயிர மெனுந்தணிகை மாநகரில் வாழ்வுதரு
பாவையர்களிருவர் நேசா
பண்ணவர்கள் மிகவாழ்த்த மண்ணவர்கள் தொழு
பாலகுமரக் கடவுளே. [தேத்தும்

## 3. பச்சை

அருட்பச்சை தமிழ்முனி அகத்தியர்க்கன்போ
டனுக்கிரகம் செய்த பச்சை,
அரும்பச்சை ஞானமுதல் வேதாந்த சித்தாந்தம்
அளித்த முழுப்பச்சை நீயே
இருட்பச்சை நிற மாலும் இமையோர்கள் நாதனும்
இருக்கு மொழி வேதியனெலாம்
எண்ணிலா அவுணரெனும் பச்சைகட் கஞ்சியே
இணையடிக் கபயமென்னத்
தெருட்பச்சை வடிவேல் திருக்கரத் தேந்தியே
சினந்தவுணர்க் கருவறுத்த
திருப்பச்சையே வருக அருள்வைத் தெனைக்காத்து
சீலமிகு வாழ்வளித்தே
பருவந்து பாழ்செயும் பிறவிநோய் நீக்கியே
பாலித்தருளுபாயா
பண்ணவர்கள் மிகவாழ்த்த மண்ணவர்கள் தொழு
பாலகுமரக் கடவுளே. [தேத்தும்

## 4. பவளம்

செம்பவள இதழிகுற மகளுடன் பவளவாய்த்
தேனெழுகு தெய்வ யானை
திருப்பவள அடிமலர் சேவித்து நிற்கவே
திகழ் பவள வேற் கரத்தோ(டு)
இன்பவள மெனுமிருவர் இருபுறம் சார்ந்திட
எழிற்பவள கிரி தணிகையில்
இமையவர்கள் மாலயனும் பவளமலர் சொரியவே
எழிலுடன் நின்றமுருகா
உன்பவள மலர்த்தாள்கள் என்றனுக் கருள்வையோ
ஓராறு முக முள்ளவா
ஓதேவ ரக்ஷகா ! மாதுமையின் புத்திரா !
ஓங்குசிவற் கருள் குருபரா
பண்பாடும் பழநிமலை திருப்பரங்குன்ற மமர்
பகர் அரிய பவளமலையே
பண்ணவர்கள் மிகவாழ்த்த மண்ணவர்கள் தொழு
பாலகுமரக் கடவுளே. [தேத்தும்

## 5. நீலம்

நிறநீல கிரவுஞ்ச மலை முழுதும் பொடியாக
நீள்நீல வடிவேலினால்
நிமை நீல வெட்ட வெளி யாக்கி சூர்தாருகனின்
நெஞ்சந்தனைப் பிளந்தாய்
அருநீல பாசமொடு சூலம் பிடித்து வரும்
அந்தகன் நீல மகிஷம்
அதிலேறிப் படைநீல தூதரொடு வருபோதில்
அடியேனை காத்தருள்வாய்

திருநீல கண்டனருள் செல்வமே செப்புதற்
கரியசிவ சண்முகேசா
ஜெகதீசனே அன்பர்பவநாசனே உண்மைத்
திகழ் அன்பர் துதி நேசனே
பருநீல விழிமாதர் மோகத் தழுந்தியே
பதைக்காதிருக்க அருள்வாய்
பண்ணவர்கள் மிகவாழ்த்த மண்ணவர்கள் தொழு
பாலகுமரக் கடவுளே. [தேத்தும்

## உயிர் வருக்கப் பாமாலை

### ஆசிரிய விருத்தம்

அன்பாகி அன்பினுக் கோர் அமுதமாகி
அரியாகி அயனாகி அரனுமாகி
முன்பாக சுரர்களும் முருகனாகி
மூவிரண்டு முகங்கொண்ட மூர்த்தியாகி
பண்பயிலும் பார்ப்பதியோர் பாகனுக்கோர்
பாலகனாய் வந்துதித்துப் பாரின்மீது
தன்மை மிகு விளையாடல் பலபுரிந்த
தானுவே திருத்தணிகை மலைவாழ் கோவே.

ஆட்டிடனாய் நெடுமலையின் சிகரந்தன்னை
அமரர்களைப் புறமுதுகிட் டோடச் செய்தாய்
தாட்டியாய் வேதனுக்கும் விலங்குத் தொட்டாய்
தரணியுள ஜீவர்களைப் படைத்து நின்றாய்
மாட்சிமைகொள் பரசிவனுக் குபதேசித்தாய்
மலரயனைச் சிறையினின்றும் வீடு செய்தாய்
தாட்டியாய் எனையாள வேணும் இன்றே
தானுவே திருத்தணிகை மலைவாழ் கோவே.

இப்புவியில் உன்னைவிட வேறு தெய்வம்
இல்லையென உன்பாதம் தொழுது நின்ற
செப்பரிய தேவர்களின் துயரம் தீர்க்க
ஜெயவடிவேல் கரம் பிடித்த தேவாமிக்க
ஒப்பிலா அதிவீர அசுரர் தம்மை
ஒருநொடியில் வென்றழித்த ஒருவா நாயேன்
தப்பித மென் செய்தாலும் பொறுத்தாட் கொள்வாய்
தாணுவே திருத்தணிகை மலைவாழ் கோவே.

ஈயாத லோபிகளில் முதல்வனோ யான் ?
இணக்கமென்ப தென்னிடத்தி லில்லையோதான்?
ஓயாத மனக்கவலை எனக்கேன் தந்தாய் ?
உம்பர்பணி தற்பரனே உனையல் லாது
நேயமாய் எனையாள வல்லோர் யாவர்
நின்மனம் தீ யடியவன் மீதிறங்கி இன்றே
தாயாக வந்தெனை நீயாள வேண்டும்
தாணுவே திருத்தணிகை மலைவாழ் கோவே.

உன்னுடைய திருநாமம் ஆறெழுத்தை
உறுதியுடன் அனுதினமும் மனதிற் கொண்டே
பண்ணோடுன் சரிதைகளைப் பாடிஆடி
பத்தரொடு சத் சங்கமாகச் சேர்ந்து
மின்னுரின் மாய்கையதை யொழித்தே நித்தம்
வேதமுறை நின்னடியார்க் கடிமை செய்து
தன்மையுறு பத்திநிலை யடையச் செய்வாய்
தாணுவே திருத்தணிகை மலைவாழ் கோவே.

ஊக்கமுடனுன் பாதம் தன்னைக் காண
ஒருமையுடன் திரிகரண சுத்தியோடே

ஆக்கையுடன் பொருளாவி மூன்றுந் தந்தேன்
அடிமை எனக் கிறங்கியே யுன்திருக்கண்
நோக்கமுடன் வந்தெனைநீ ஆளாவிட்டால்
நான்முதல்வ நின் பெருமைக் கழகதாமோ ?
தாக்கியே அசுரர்களைச் சிதைத்து வென்ற
தானுவே திருத்தணிகை மலைவாழ் கோவே !

எப்போது மெந்தனுக்குன் பக்தி வேண்டும்
இப்புவியில் உன்னடியார்ச் சேவை வேண்டும்
செப்பரிய தணிகைமலைக் கேக வேண்டும்
சிவகுமரா வென்றே நீறணிய வேண்டும்
அப்பா என் தீவினைகள் தீர்க்கவேண்டும்
ஆறுமுக சேவை எனக் கருள வேண்டும்
தப்பாதுன் திருக்கருணை தந்தாட்கொள்வாய்
தானுவே திருத்தணிகை மலைவாழ் கோவே.

ஏது மறியேன் சிந்தை யடக்க வல்லேன்
ஈராறு புயம் படைத்த எம்பிரானே
ஓதுமறை முதல்வனென உன்பாதத்தை
உறுதியுடன் தினம்பணியும் அன்பர் நேசா !
தீதுபுரி துஷ்டர்களைச் சங்கரிக்க
ஜெயவடிவேல் கரம் பிடித்ததேவா மிக்க
சாது சங்க பழக்கமெனக் களித்தல் வேண்டும்
தானுவே திருத்தணிகை மலைவாழ் கோவே.

ஐயாமிட லோபிகளி னுறவு வேண்டேன்
அத்தனுனைப் பஜிக்காத ரன்பு வேண்டேன்
பையரவ மதை யணிந்தோன் பாலா எந்தன்
பந்த வினைகளை நீக்கிப் பாவம் போக்கித்

துய்ய உந்தன் சேவடி எந்நாளும் போற்றும்
சுத்தமதி எந்தனுக்குச் சுகமாய்த் தாரும்
சைவ சமயப் பரனே மனவாக் கெட்டாத்
தாணுவே திருத்தணிகை மலைவாழ் கோவே.

ஒப்பிலா முழுமுதலென் றுன்னை நானே
உறுதியுடன் அனுதினமும் பஜிக்கின்றேனே.
அப்பா உன் மனமென்ன கல்லோ ! நீதான்
அணுவளவும் திருக்கருணை அடியேன் மீது
வைப்பாயே எனில் எந்தன் கர்ம மெல்லாம்
வருகதிரோன் முன்பனிபோல் ஓடிடாதோ
தப்பாதுன் திருக்கருணை தந்தாட் கொள்வாய்
தாணுவே திருத்தணிகை மலைவாழ் கோவே.

ஓதுமுன்றன் ஆறெழுத்தின் வலிமையாலே
உம்பர்களும் தன்னிலையில் நிலைக்கலானார்
தீதுசெய்த அசுரர்களும் மாய்ந்து விட்டார்
தெய்வானை வள்ளியுமுன் தேவியானார்
ஆதி என்று சங்கரனும் பெருமை பெற்றான்
அயனெடுவிண் டுவுநின்ற னருளைப் பெற்றார்
சாது சங்க ஆறெழுத்தின் பரனே எங்கள்
தாணுவே திருத்தணிகை மலைவாழ் கோவே.

ஔவிய மொன் றில்லாதார் மனத்துள் நின்ற
ஐயனே வள்ளிக்காய் அடவிதன்னில்
செவ்வியதாய் வேடுவன்போல் வேடங் கொண்டீர்
ஜெகதீசா நின்னடியார் போலுஞ் சென்றீர்
கொவ்வை நிக ரிதழாளைக் கூட்டிவந்து
குஞ்சரியாளு டனழகு மணம் புரிந்தீர்

தௌவை எனக் கனுகாமல் கிருபை தாரீர்
தானுவே திருத்தணிகை மலைவாழ் கோவே.

## சண்முகப் பதிகம்

பேசுதற் கரிதான நவமணி இழைத்திட்ட
பெருமை மிகு ரத்ன முடியோ
பேரண்டத் தொரு கோடி ரவியுதைய மென உம்பர்
பேச இமையா நாட்டமும்
கூசவே ஈராறு செவியிலுயர் குண்டலமும்
கோமேதகச் சுட்டியும்
கூறரிய பிறைநுத லொடருள்விழியில் கருணைமிகக்
கொஞ்சுங் கிருபா பார்வையும்
வாசமுறு முன்னூலும் மாணிக்க ஆரமும்
வஜ்ஜிரக் கவச மழகும்
மயிலழகும வேலழகும் சேவற் கொடியழகும்
மணமிகு கடம்பினழகும்
தேசிகா நான்கண்டு தெரிசிக்க வந்தருள்
திருத்தணிகை நகரில் வாழ்வே
சிங்கார வேலனே சிவசுப்ர மண்யனே
சிவ சண்முகக் கடவுளே.

ஆதியாய்ச் சதுர் மறையும் அண்டரும் தொண்டரும்
ஐயனே உனது மகிமை
அறியாமல் உலகின் மிசை சூரனுக் கஞ்சியே
அபயமென அந்த நாளில்
சோதியாம் பரமன் சொற்படி கொடிய வேல்கொண்டு
துணைவர் நவ வீரரோடு
சொர்க்க பாதாளமெலாம் மிக்கவு நடுங்கிடத்
தூரியே சென்ற வீரா.

நீதியே நிமலனே நித்தியப் பிரம்மமே
நிர்விகாரச் சொரூபா
நித்தனே சுத்தனே சத்தியுமை புத்ரனே
நீ யென்னை யாளல் அரிதோ ?
திதிலா சதுமுகனைத் தண்டித்த வீரனே
திருத்தணிகை நகரில் வாழ்வே
சிங்கார வேலனே சிவ சுப்ரமண்யனே.
சிவ சண்முகக் கடவுளே.

தேவதி தேவனே சிவகாமி பாலனே
சிங்கார வடிவேலனே
சித்தர்களும் முத்தர்களும் நத்தியே பூசிக்கும்
தேசிகா சிவன் தனக்கும்
ஆவலாய்த் திருஞான உபதேசமே செய்த
அத்தனே சுத்த வடிவே
அறிவதற்கரிதான ஆனந்த வெள்ளமே
ஐயனே உனது மகிமை.

பூவுலகில் அறியாமல் புல்லறிவின் லேழை
புலம்புகின்றேன் 'ஆகையால்
புதல்வன்மேல் கருணைதான் புரியாதிருப்பதேன்
பொங்கர வணிந்தொன் மைந்தா !
தேவனே அண்டமொடு நவகண் டமும்துதி ]
திருத்தணிகை நகரில் வாழ்வே
சிங்கார வேலனே சிவசுப்ர மண்யனே
சிவசண்முகக் கடவுளே.

கார்த்திகைப் பாலனே ககனர்பணிசீலனே
காத்தருள் உமை பாலனே

கங்காதரன் செவியில் ஞானோபதேச மருள்
கந்தனே அரன் மைந்தனே
போர்க்களத் தவுணரைப் புறமுதுகிடச் செய்த
புண்யனே மிகு கண்யனே
போற்றினேன் உன் துதிகள் சாற்றினேன் கருணைநீ
புரியாய் திருத்தல் அழகோ

வார்தீப கோலமாய் வள்ளிப் புனந்தனில்
வந்திட்ட மிடு சுந்தரா
வாசுதேவன் மருக ! அமரர் சேனுபதி !
வாரணு பரி பூரணு
தீர்த்தமே மெய்ஞ்ஞான தீர்த்தமாய் அருள்பெருகு
திருத்தணிகை நகரில் வாழ்வே
சிங்கார வேலனே சிவசுப்ரமண்யனே.

சிவ சண்முகக் கடவுளே.
அத்தனே முன்னாளில் ஐமுகற் குபதேசம்
அன்பாய் உரைக்க விலேயோ
அயன்றனை தண்டித்தோர் அண்டமோ டெண்டிசை
அளித்துநீ காக்கவிலேயோ
நத்திநாளும் துதி அகத்தியமுனிச் செவியில்
ஞானம் புகட்ட விலேயோ
நக்கீரன் ஆபத்தை தீர்க்கவிலேயோ மலேயை
நாசப் படுத்தவிலேயோ

என்திசையுமுன் சொந்த பக்தர்களை வாட்டும்
இடுக்கண் தவிர்க்கவிலேயோ
இமையவர்கள் வாழவே சூரனைக் கிளேயுடன்
இத்தரையில் மாய்க்கவிலேயோ

சித்தமு மகிழ்ந்தடிமை யைக்காத்த லருமையோ
திருத் தணிகை நகரில் வாழ்வே
சிங்கார வேலனே சிவசுப்ர மண்யனே
சிவ சண்முகக் கடவுளே.

ஆதாரமாய் உனது திருவடி துதிக்கின்ற
அன்பர்கள்தம் உறவு வேண்டும்
அகத்தொன்று வைத்துப் புறத்தொன்று பேசுவோர்
அணுகாமை நல்க வேண்டும்
வேதாகமம் கற்க வேண்டுமவ் வழியினில்
விரும்பி நான்நிற்க வேண்டும்
விதிமுறை பிசகிடா மதிவேண்டும் அடிமை நான்
வேறு தெய்வத்தை நம்பிப்
பாதரவிந்தமதை மறவாமை வேண்டும் எனைப்
பஞ்சமா பாதகங்கள்
பற்றிடா திப்புவியில் இருக்கநின் அருள் வேண்டும்
பவங்களணு காமை வேண்டும்
தீதான கருமம் நான் செய்யாமை வேண்டு மருள்
திருத்தணிகை நகரில் வாழ்வே
சிங்கார வேலனே சிவ சுப்ர மண்யனே
சிவ சண்முகக் கடவுளே.

அரிய உன் சேவடிகள் அல்லிலும் பகலிலும்
அன்பாகவே துதித்தே
அரகரா சிவயநம சிவசண்முகா வென்றே
அள்ளி வெண்ணீரணிந்தும்
உரிய ருத்ராக்கமும் சிவவேடமுங் கொண்டு
ஓங்குநற் றணிகை மலையில்

உள்ளன்பி னோடும் உன் கிரிவலமதாய் வந்து
ஊழ்வினை களையறுத்துக்
கரியமால் மருகனின் கழலடி பணிந்து நான்
கடைத் தேறவருள் புரிகுவாய்
காங்கேய சீலனே கங்கை உமை பாலனே
கருது மன்பர்கள் நேயனே
தெரிவரிய தேவர்முதல் சித்தர்களும் போற்றிடும்
திருத்தணிகை நகரில் வாழ்வே
சிங்கார வேலனே சிவசுப்ரமண்யனே
சிவ சண்முகக் கடவுளே.

எண்ணரிய பிறவிகளில் மானிடப் பிறவி நான்
எடுத்தென்ன உலகதினிலே
எம்பிரான் உன்னடியர் சேவடி களைப் போற்றும்
ஏற்றமதை கண்டறிகிலேன்
மண்ணுலகிலெனை வரட்டும் மூவாசை எனுங்கொடிய
மயக்கமதை விட்டறிகிலேன்
மாறுத பிறவி நோய்தனை யொழித்திடு நல்ல
மார்க்கமதைக்கண் டறிகிலேன்
விண்ணுறையும் தேவர்துதி வேலனே உன் கருணை
மேவுநாள் அறிகிலேனே
வீரனே சூரசம்சாரனே அன்பர்துதி
மெய்யனே மிகுதுய்யனே
தென்னறை தமிழ்குதவு தெய்வமே வந்தருள்
திருத்தணிகை நகரில் வாழ்வே
சிங்கார வேலனே சிவ சுப்ரமண்யனே
சிவ சண்முகக் கடவுளே.

கலியுகந் தன்னிலே கண்கண்ட தெய்வம்நீ
கர்த்தனே உன்னையல்லால்
கருதவும் பிறதெய்வம் உண்டோ என் ஐயனே
கடையனேன் ஆவியுடலம்
பலியாகத் தந்தனன் பத்தனென் றென்னைநீ
பாதுகாத்தருள் செய்குவாய்
பரமகுரு நாதனே அரிய மறைபோதனே
பக்த ரக்ஷக மெய்யனே
நலிசெயுங் குன்ம நோய் குட்டமொடு சூலையும்
நளிர் சுரம் பேதி காசம்
நட்ட முறுகர்ப்ப நோய் வலிமூல விப்புருதி
நமன்வாதை என்புறுக்கி
சிலந்தி முதல் யாவும்நின் அருளால் பறக்குமே
திருத்தணிகை நகரில் வாழ்வே
சிங்கார வேலனே சிவசுப்ர மண்யனே
சிவ சண்முகக் கடவுளே.

பக்தர்கள் தொழுதேத்தும் பாததா மரைகளைப்
பாலன் யான் பார்க்க வென்றுப்
பாடியே அனுதினம் கொண்டாடி ஏத்தினேன்
பாரா திருத்தல் அழகோ
கர்த்தனே உந்தன்நற் கருணைதான் இல்லையோ
கடையனேற் கருள் செய்திடாய்
கருதரிய சேவடியைப் பாவியான் பார்த்திடல்
கண்ணேறுபடு மென்பதோ
வித்தாரமாகவே மயிலேறி விளையாடும்
விமலனே அமல நாதா
வேதாந்த போதனே நாதாந்த தெய்வமே
மேவிநீ காட்சி தருவாய்

சித்தாதி யோர்கள் பணிதேவனே மாடமலி
திருத்தணிகை நகரில் வாழ்வே
சிங்கார வேலனே சிவசுப்ர மண்யனே
சிவ சண்முகக் கடவுளே.

(சந்த விருத்தம்.)

ஆசையான சாகரத்தில் ஆழ்ந்தி வீணில் யானுமே
அலைந்தலைந்து முடிவுகாணுதய்யோ வாடி ஏங்கியே
ஓசைகேட்டு மானினங்கள் உயிரிழக்கும் தன்மை போல்
உலகிலுள்ள பேதைமாதர் உறவுகொண்டு வாடியே
பாசையுற்ற பாழ்ங்கிணற்றில் பதறிவீழும பித்தனைப்
பத்தன்யானும் தத்தி வீழப்பார்த்திருப்ப தாகுமோ ?
மூசையிட்ட செம்பொன் மேனி முருகனை தெய்வமே
முழுது முந்தன் திருவுளத்தில் என்னையாள வேணுமே:

வேணுமுந்தன் ஆறெழுத்தை அறிவினால் எந்நாளுமே
விரைவினோடு தரணிமீது வாழ்த்தி ஏத்து நேமமே
நாணிநின்ற கஞ்ச நெஞ்ச மஞ்சி யஞ்சலென்றிட
நவிலொணு விலங்கு பூட்டி நடுங்க செய்த பாலனே
பேணி வந்த பித்தனை அத்தனும் மகிழ் கொள
பிரியமோடு தரணி மீது பிரணவ முரைத்தவா
தோணியாகி கர்ம சாகரத்தை நீந்த உதவி செய்
சோதிரூப வேதநாத கோலசீல வேலனே.

## தேவ தேவே!

(எண்சீர் விருத்தம்)

உன் நாமத் தருளுணர்ந்தோர்க் கருள ளிக்கும்
உத்தமனே உன் பெருமை யறியா மற்றுன்

பொன்னாமன் தனைவதைத்தேன் மருகா மிக்கப்
புலம்பினேன் மூவாசை கொண்டே யானும்
என்னுலிங் காவதொரு செயலுமில்லை
எல்லாமுன் திருக்கூத்தே யன்றி மற்றோர்
தன்னுலிங் காவதுண்டோ தணிகைவாழும்
சண்முகனே சைதன்ய மான வாழ்வே.

சண்முகமும் கமலமலர்த் தடக்கை வேலும்
தாட்டீக மயில் சேவற் கொடியு மின்ன
அண்ணலே உன்சேவை அருளாதிங்கே
ஆர்செய்த போதனையோ ஐயோநீதான்
பண்ணுகின்ற செயலனைத்தும் விந்தை விந்தை
பாவியேன் என் செய்கேன் பதைக்கின்றேனே
உண் முகமாய் எனையாள வேணுங் கண்டாய்
உன்னையன்றி ஆகமத்தின் பொருள்வே றுண்டோ.

ஆகமெனும் சதுர்மறையின் முடிவிற்றங்கும்
அத்தனே உன் கருணை இல்லையோதான்
ஏகமாய் பொருள் கவர்ந்து வஞ்சித் தேகும்
ஏந்திழையர் கண்வலையிற் கட்டுண்டே நான்
மோகமெனும் பெருங்கடலில் வீழ்ந்தேன் வீழ்ந்தேன்
முத்தனே கரையேறும்வழியைக் காணேன்
பாகமாய் கருணை எனுந் தெப்பந் தந்தே
பாதுகாத்திடல் உனக்குப் பாரமோதான்.

பாரமோ கூர்வடிவேல்தரித்த கையா
பண்ணவரும் மண்ணவரும் துதிக்கும் ஐயா
நேரமோ எனையாள உந்தனுக்கு
நெஞ்சந்தான் நெகிழ்ந்திலையே வஞ்சமேனோ

கோரமோ யான்செய்த பழிகளிட்டம்
குவலயத்திற் பாவிகளில் முதல்வனேயான்
தீரமோடன் டெதிர்த்த அசுரர் மாய
ஜெயவடிவேல் செலுத்திட்ட தேவதேவே.

## குகப் பதிகம்

தணிகைவாழ் பரனே சத்திவேற் கரனே
தருணமீதென்னையாள்வதற்குச்
சஞ்சல மதனால் மிஞ்சியே பயந்து
தவிக்கிறேன் ஏழையானுலகில்
பிணியதனாலும் பகைவர்களாலும்
பிணைபடு கடன் துயராலும்
பித்தனேன் துடித்துன் பதமலர்த் துணையாய்
பிணித்தனன் விட்டிட மாட்டேன்
துணிவுள அசுரர் தமைச் சிதைத் தமரர்
துயரமே நீக்கினாய்; முன்னர்
துக்க சாகரத்தில் மூழ்கிய கீரன்
துரிதமாய் அழைத்திட வந்தே
அணி பெற நின்றே ஆதரித்ததுபோல்
அடிமையைக் காத்திடல் அரிதோ
அத்தனே அடியார் நித்தமும் துதிக்கும்
ஆறெழுத்தான ஓம் குகனே.

ஆதியாம் அரனுக் கருமறைப் பொருளை
அன்புடன் உணர்த்தினை: மே னாள்
அகத்தியன் தனக்கு மருத்துவ போத
ஆயுள் வேதமும்முத் தமிழும்

நீதியாய் உரைத்தே ஆண்டனை; நின்னை
நிகழ்த்திடும் வேதமும் பொய்யோ
நித்தனே நிமலா நிற்குஞ வேலா
நின் றஞ னெழுத்தையே நம்பி
ஓதினேன் இது நாள் உள்ளமும் பதறி
ஓலமிட்டலறிடு மென்முன்
ஓடியேவந்து சேயனைக் காப்பாய்
உத்தமர்க் குத்தமப் பொருளே
தீதிலா தணிகைமா நகரதனில்
செகமெலாந் துதித்திட நின்று
திருவருள்புரியும் ஞான நாயகனே
சேவலங் கொடியுயர்க் குகனே.

வஞ்ச விவ்வாழ்வைச் சதமென நினைந்து
வையக மீதிலென் நாளும்
வறுமை நோய் துன்ப மதிலெலாம் உழன்று
வஞ்சியர் மாய்கையில் மூழ்கி
கொஞ்சமு மெந்தன் மதியொரு நிலையிற்
கூடுவதில்லை என் செய் கேன்
கொடிய பாதகனென் றெனைவிடுத் தாலோ
குவலயம் உன்னை யேசாதோ
கஞ்சநன் மலரின் சிறுநகை முகத்துக்
கன்னியர் வள்ளிதெய்வானை
கருதுமிப் புதல்வன் தனை வெறுப்பாரோ
கபடமென் மீதினில் ஏனோ
தஞ்சமென் றுனது தாளடி பணியும்
தனையனை ஆதரித்தருள்வாய்
சத்திவேற் கரனே உத்தமர் துதிக்கும்
தணிகைமாநகரில் வாழ் குகனே.

இப்புவியதனில் உனைவிட தெய்வம்
இல்லை என்றுன் திருவடியை
இறைவனே போற்றி நறுமலர்த்தூவி
ஏத்தியான் வழிபட வறியேன்
செப்பருந் தணிகை மலைமிசைப் போந்து
தேசிகா எனவலம் வந்து
தேவரின் னடியார் அடிகளைப் போற்றி
சேவை செய்தவர்கள் பால் நின்றே
ஒப்பிலாதவர் நல் லாசி பெற்றெனது
ஊழ்வினை தீர்த்திட வருள்வாய்
உயர்தரு ஞான பதமருள் தேவே
உமையவள் தரு குருமணியே
அப்பனே எந்தன் அருந்தவக் கொழுந்தே
ஆதியு மந்தமில் பரனே
ஐயனே அடியார் நெஞ்சகத் துறையும்
அறுமுகமான ஓம் குகனே.

சீர்பெறுமடியார் தமை உவந்தாளும்
தேவனே தேசிகோத்தமனே
செங்கண்மாலயனுந் தேடியுங்காணு
சிவன் தனக் கருள்புரிந்தவனே
பார்தனில் அடியேன் படுந்துயரதனை
பரிகரித்தடிமை மீதிரங்கி
பக்ஷமாயுனது பாதநற் சேவை
பாலனுமெந்தனுக் கருள்வாய்
கூர்வடிவேலா குஞ்சரி லோலா
குமரனே அமரர்தம் வாழ்வே
குற்ற மொன் றில்லா நற்றவ ரேத்தும்
கோதிலா ஞான சண்முகனே

தற்பரா தணிகை மாநகரதனில்
தஞ்சமென் றவர் வினை போக்கும்
தத்துவாதீத வத்துவாய் நின்ற
சரவண பவனெனும் குகனே.

முத்தர்கட்கரியோய் மூவிரு முகத்தோய்
மூர்த்தியே மும்மல மொழிக்கும்
முழுமுதற் பொருளே அரிய மெய்ஞ்ஞான
மூலனே வேலனே அடியேன்
சித்தியே பெறுநல்வகை அறியாமல்
தியங்கியே வாடுதல் முறையோ
சீர்தவப் பேறே ஞான தேசிகனே
சிறந்த நன்மதி எனக் கருள்வாய்
அத்தனே அயன் மால் அடிமுடி காணு
ஆதியோன் தனக்கருள் செய்த
ஆரணப் பொருளே காரண உமையாள்
அகமகிழ்ந்தருள் சிறுபாலா
பத்தியே புரியும் பதமதை எளியேன்
பரிவுடன் உணர்ந்திட அருள்வாய்
பாவ நாசகனே சேவலங் கொடியோய்
பக்த ரக்ஷக னெனும் குகனே.

உத்தமக் குருவே உமை மகிழ்திருவே
உன்தினம் அன்புடன் மனதில்
ஓதி மெய்ஞ்ஞானத் துருகினோர் முன்னர்
உயர்வடி வேலுடன் தோன்றி
தத்திதாமென்னத் தாண்டவம் புரியும்
சண்முகா என்முகம் பாராய்
சரவண பவனே சத்திவேற் கரனே
சங்கரன் தனக்கருள் செய்த

வத்துவே வானோர் வாழ்த்திடும் பொருளே
வாடிய பயிர்க்கொரு மழையே
வள்ளலே எந்த னுள்ளமே களிக்க
வரமருள் புரிந்திட வேண்டும்
எத்திசையோரும் போற்றுநற் றணிகை
இருந்திடும் பரமசற்குருவே
ஈசனே பவத்தின் நாசனே எந்தன்
இருதயத் தமர்ந்தருள் குகனே.

பாலனெந்தனுக் குன் பதமல ரன்றி
பார்தனி லோர்கதி இல்லை
பரிவுடன் வந்தென் முறைதனைக் கேட்டுப்
பாதுகாத்தருள் தராதிருந்தால்
மூலமாம் உந்தன் அருள்தனக் கழகோ
முத்தனே முவிருமுகங் கொள்
மூர்த்தியே தெளிந்த ஞான பண்டிதனே
முக்கணன் அருள் தவப் பேறே
கால மீதருள்வாய் கந்தனே எந்தன்
கருத்தினில் இலகிடுந் தெளிவே
காரணப் பொருளே நாரணன் மருகா
கருதுநற் றணிகையம் பதியில்
சிலமோடமர்ந்த சடாக்கரப் பொருளே
சிவசிவா சிவபரஞ் சுடரே
செங்கல்வராயா துங்கவர் போற்றும்
திருத்தணி அமர்ந்தருள் குகனே.

பஞ்சபாதகங்கள் பல புரிந்தேனே
பத்தர்கள் முத்தர்கள் தமக்குப்
பழிபுரிந்தேனே கற்பினில் உயர்ந்த
பாவையர் சாபமேற் றேனே

கொஞ்சமு மஞ்சா துலகினில் பலர்க்குக்
கொடுமையான் என்ன செய்தேனோ
கொற்றவர் சபையில் உற்றதை உரையாக்
குற்றமே புரிந்துமுன் றேனோ
வஞ்சனையாக வழிபறித்தேனோ
வாடினோர் தமைப் பழித்தேனோ
வறியவர் எளியோர் மனமெலாம் பதற
மாபழி ஏது செய்தேனோ
கொஞ்சமும் அறியேன் ஏழையேன் சிறியேன்
குற்றமே தீர்த்தருள் செய்வாய்
குறை படாதுலகில் நிறைதவத்தோர் சூழ்
குருபரனுரு மெங் குகனே.

பவப்பிணி ஒழிக்கும் பரமதேசிகனே
பாரினில் ஏழை என் செய்வேன்
பந்தமும் மாயைத் தொந்தமும் ஒன்றி
பற்றியே வதைக்குதையையோ !
சிவபெருமானின் நுதல்விழித் தோன்றல் !
தெய்வமே என்முகம் பாராய்
செந்தில் வேலவனே ஆவினன் குடிவாழ்
தேசிகா பரங்குன்றின் பரனே
தவமுனி யோர்கள் சித்தர்க ளேத்தும்
தற்பரா சிற்பார அமரர்
தாம் தொழும் பரனே தணிகையம்பதியில்
சகமெலாம் புகழ்ந்திட நின்றோய்
குவலய மேத்தும் குஞ்சரி பாகா
குலவுசீர் வள்ளியோர் பங்கா
குமரசற்குருவே பரமதேசிகனே
கோதிலார் பணிந்திடுங் குகனே.

## பேதை நெஞ்சமே

### கலிவிருத்தம்

பேதை நெஞ்சமே பிறவி நோய் கெட
ஏது மார்க்கமென் றெண்ணி மாழ்கிடேல்
தாதையாகிய சண்முகன் தனை
ஓதிஓதியே உருகி ஏத்துதி.

உண்மை உண்மையீ தொன்றெதிரிலே
வன்மை யாகிய வள்ளல் வேறிலே
கண்கள் பன்னிரண்டுள்ள கந்தனே
எண்ணு மெண்ண மெல்லா மினிக்குமே.

இனிமையாகவே இந்திரன் அயன்
பனிக்கடற்றுயில் பண்ணவன் சிவன்
கனிவுடன் தொழக் கருணை செய்திடும்
தணிகை மேவுவோய் யானுன் தஞ்சமே.

தஞ்சமென்றுன தாளடைந்தனன்
அஞ்சலென் றென்முன் ஆதியாகு நீ
வஞ்சனைபுரி யாது வந்தருள்
நஞ்சையுண்டருள் நக்கன் மைந்தனே.

நக்கன் மைந்தனே நாடினேன் உனை
இக்கணந்தனில் என்னை ஆதரி
உக்ரமா எமன் ஓடிவந்திடில்
திக்குவேறிலே தேவர்தேவனே.

தேவனே திருத்தணிகை நாதனே
ஆவலோடும் உன் ஆறெழுத்தினை
கூவிமெய்யெலாம் குளிர்வெண்ணீரிடில்
பாவமாகியப் பழிகள் மாயுமே.

மாயுமே பகை வஞ்சனை முதல்
தேயுமே பில்லி சூனியங்களும்
ஆயுள் விருத்தியும் ஆகுமேதினம்
தாயை ஒத்தருள் சண்முகேசனால்.

---

## பூமாலை சாத்தி

### வெண்பா

பூமாலை சாத்திப் புகழுந் திருவடியைப்
பாமாலை பாடிப் பணிகின்றேன்–மாமால்
மருகனே அன்பர் மகிழுந் தணிகை
முருகனே வந்தாள்வாய் முன்.

என் முன்னே வாராயேல் யாவர் துணை எனக்கே
அன்னையைப் போல்நின் றாதரிப்போர்-மன்னுபுகழ்
தேவே திருத்தணிகை செவ்வேள் பெருந்தகையே
காவாயோ பாலலெனைக் கண்டு.

கண்டு கொண்டே உன்றன் கருணைத்திறமதனை
விண்டுரைக்க யார்தரமென் வேலவனே-தொண்டர்மனக்
கூட்டில் அமர்ந்திருக்கும் கோவே அடிமை எந்தன்
பாட்டில் அமர்ந்தினிது பார்.

இனிதாக உந்தன் இணையடியைக் காணவென்றே
முனிவரும் நின் நாமம் மொழிதல்-தனிவடிவேல்
தாங்கும் பரம்பொருளே தற்பரனே சிற்பரனே
ஏங்கும் எனக்கிரங்காய் இன்று.

எனக் கிரங்கும் வேளை இஃதே ந்தலே எந்தன்
மனக் குரங்கை மாய்க்கும் வழிசெய்-அனைத்துக்
கருணை மழை பொழியும் கற்பகமே இன்னே
தருணம் எதிர்வருவாய் தான்.

வருவாய் குமரேசா வஞ்சமினிச் செய்யாய்
குருவாய் ஏனை அடிமைகொள்வாய்-அருமறைகள்
தேடுஞ் சிவபெருமான் செல்வமே உன்னடியை
நாடும் படியருள்வாய் நன்று.

நன்றே உன் சீரடியார் நாடுந் திருத்தணிகை
குற்றே யமர்ந்தருளுங் கோவே நான்-மன்றுடித்
தேடிப்பணிந்தேன் சிவகுமார தேவர்களும்
பாடிப் பணி நின் பதம்.

## பிரார்த்தனை-தணிகைவாழ்வே

வானுலகாதியாக வையகத் தெவரும் போற்றும்
கானமா மயிலோ னேயுன் கருணையென் மீதில் வைத்துத்
தானமாய் உனது திவ்ய தரிசனம் தந்தாற் போதும்
மோனமா மறைகளேத்தும் முதல்வனே
[தணிகைவாழ்வே.

எத்தனை நாளாய் இந்த எளியவன் துன்பத்தாலே
அத்தனுன் அருளிருக்க அவனியில் வாடப்போமோ
முத்தனே மூவராதி முதல்வனே முருகா எங்கள்
கர்த்தனே சேய னென்னைக் காத்தருள் தணிகை வாழ்வே.

தாருகன் பானுகோபன் தணல்முகன் குருதிக் கண்ணன்
சூரனும் மடியச் செய்த சுத்தனே என்னைமிக்க
கோரமாய் வாட்டுமிந்தக் கொடிய துன்பத்தை மாய்க்க
வீரவேல் ஏவிடாயோ வித்தகா தணிகை வாழ்வே.

தந்தையின் கனிக்காசித்துத் தரணியை வலமதாகச்
சுந்தரமயில் மீதேறி துரிதமாய் வந்தகோவே
அந்தரத்தமரர் யோகர் அனுதினம் துதிக்கு மெங்கள்
கந்தனே வருவாய் ஆதிக்கடவுளே தணிகை வாழ்வே.

குறமகள் வனப்பிற் சொக்கி கோரியே கானகத்தில்
நரைத் தலைக் கிழவனைப்போல் நாடியே சென்று கண்டு
திருநிறை தணிகை தன்னில் திருமணங் கொண்ட
[கோவே
தரைமிசை என்னைக்காப்பாய் தற்பரா தணிகை வாழ்வே.

கிரௌஞ்சமலையைப் பேர்த்தாய் — கிரனைக்காத்தாய் முன்னம் கிரவுஞ்சமலையைப் பேர்த்தாய்
பாரதில் குறுமுனிக்குப் பண்புடனுபதேசித்தாய்
நேரினி லயனுக்கன்று நெடியதோர் விலங்கிட்டாண்டாய்
பாரினில் என்னையாள பாரமோ தணிகைவாழ்வே.

நூல்களைக் கல்லாப்பேதை நுண்ணறிவில்லாப் பேதை
மால் மருகாநின்றுளை மகிழுடன் துதியாப்பேதை
சேல்விழி மாதராசை சிந்தையில் நிறுத்தும் பேதை
வேல் கரத்தரசே நின்றுள் மேவினேன் தணிகை வாழ்வே.

வந்தனம்பரனே மாதர்வள்ளிதெய்வானைக் கேற்ற
கந்தனே முத்தரேத்தும் கடவுளே வந்தனங்காண்
முந்தவே அசுரர்தம்மை முடித்துநற் சுரரைக் காத்த
எந்தையே என்னையாள் எம் மீசனே தணிகை வாழ்வே

ஆதிநீ அந்தம்நீயே அகில காரணனும் நீயே
சோதிநீ துரியம் நீயே சுடரொளிப்பரனும் நீயே
நீதியாய் மறைகளேத்தும் நித்தியம் பிரம்மம் நீயே
பாதிமா மதிபுனைந்தோன் பாலனே தணிகை வாழ்வே.

அன்னைநீ அப்பன்நீயே அரியயன் சிவனும் நீயே
மன்னன்நீ சோதிநீயே மாதவப் பொருளும் நீயே
பின்னுநீ முன்னும்நீயே பிரம்மம் ஓங்கார நீயே
என்னையாள் முருகா எங்கள் ஈசனே தணிகை வாழ்வே.

கூர்வடிவேலா போற்றிக் குறைமகள் நாதா போற்றி
கார்குழல் தெய்வயானைக் கணவனே போற்றி போற்றி
பார்புகழ் குருவே போற்றி பன்னிரு கரனே போற்றி
சீர் பெறுகுகனே போற்றி தெய்வமே தணிகை வாழ்வே.

கார்த்திகைப் பாலா போற்றி கனகரத்தினமே போற்றி
மூர்த்தியே போற்றி போற்றி மூவிரு முகங்கள் போற்றி
பார்தனில் இணையிலாத பன்னிரு விழிகள் போற்றி
கீர்த்தி சேர்முருகா போற்றிக் கேழ்கிருதணிகை வாழ்வே.

சரணம் ஓம் சண்முகேசா சரவணபவனே உந்தன்
சரணமே சரணம் எந்தன் சஞ்சல மதனைத் தீர்ப்பாய்
சரணம்ஓம் குகனே ஆதி சடாட்சரப் பொருளே உன்றுட்
சரண்புகும் சேயனென்னை ஆண்டருள் தணிகை வாழ்வே.

அத்தனே வாழி வாழி அறுமுகப் பரனே வாழி
முத்தனே வாழி வாழி முக்கண்ணன் சுதனே வாழி
வெற்றிசேர் மயில் வேல் வாழி வீரரொன்பது பேர் வாழி
சுத்தனே வாழி வாழி சுகமருள் தணிகை வாழ்வே.

குறமகள் கனவா வாழ்க குற்றமில் மூர்த்தி வாழ்க
சுரர்த்தளபதியே வாழ்க சுவாமிநாயகனே வாழ்க
பரனெனும் சுப்ரமண்ய பார்த்திபா வாழ்க வாழ்க
இறைவனே வாழ்க எங்கள் எந்தயே தணிகை வாழ்வே.

———

# தியான மாலை

---

### நிலைமண்டில ஆசிரியப்பா

சரவண பவ ஓம் சங்கரிபாலா
பிரணவ சொரூபா பிஞ்சகன் புதல்வா
சூரசம்மாரா சுகுண உல்லாசா
வீரமாமயிலா விக்ரம தீரா
அரிதிருமருகா ஆநந்த ரூபா
கரியுரி போர்த்தோன் களித்திடும் முருகா
கடம்பா இடும்பா கார்த்திகேயா
தடம் புகழ்க்குகனே சாமி சண்முகனே
சேவற்றுவசா செங்கல்வராயா
காவலமேற்றும் காங்கேய நேயா
ஆறுமுகத்தெம் மண்ணலே யுன்றுள்
மாறுபடாமல் மதித்திடவறியேன்
நிஷ்டையிலுன்னை நினைந்திட வறியேன்
துஷ்டரின் சங்கம் தொலைத்திட வறியேன்
அரனடியாரை அடிதொழ வறியேன்
பரமனுன் பதமே பணிந்திடவறியேன்
மாணிக்கமுத்து மரகதம் நீலம்
ஆணிப்பொன் பவளம் அம்பச்சைகெம்பு
பளிங்கெனப் புவியோர் பகர்நவ மணியும்
விளங்கவே இழைத்த, விண்ணவராலும்

அளவிடமுடியா அருள்மணிமுடியும்
பளபளவென்னப் பாருள் ளோர்கள்
கண்டுமயங்கும் கவசகுண்டலமும்
மண்டலமெச்சும் மரகதமுருகும்
நெற்றிச்சுட்டியும் நித்திலப் பதக்கமும்
முத்திடப்பவள மோகனமாலையும்
வெண்ணீரொளியும் மேதகு நூலும்
கண்ணீராறும் கருணைமாமுகமும்
திருருத்திராக்ஷ திகழ்தாவடமும்
நறுமலர்கடப்ப நல்லணி மாலையும்
முத்தணிமார்பும் மோகனமாலையும்
சித்தர்கள்மெச்சுப் திருவயிறுந்தியும்
ஒப்புயர்வில்லா உயர்துடையழகும்
செப்பருந்தானில் ஜெயவீரகழலும்
தேவரும்போற்றும் திருவடியதனில்
பாவலர்ஏத்தும் பாதச்சிலம்பும்
முன்னணிஅதனில் முப்பத்து முக்கோடி
தன்னிகரில்லா தேவர்கள்சாற்ற
பின்னணியதனில் பிரம்மரிஷிகளும்
அண்ணலேஎன்றுள் அடிபணிந்தேத்த்
சின்னம்துந்தாளி தேவதுந்துமியும்
மன்னுமெக்காளை மாபேரிடங்கா
முரசம்காளம் முதலியபற்பல
முப்பத்திருவகை முறையுடன்முழங்க
செப்பருந்தேவத் திருவினர்ஆட

ஓம்பிலாவேத ஓசைகிளம்ப
அப்பனே நீவரும் அரும்பவனியதை
ஒப்புடன்கண்டென் உளமதுமகிழ
துப்புறக்கலிசெய் துன்பமும்தீர
வையகமும்புகழும் வள்ளலேஅருள்வீர்
செய்யஉன்றுளை தினம்சரணடைந்தேன்
தேவர்கள்முதல்வா சிவனருள்புதல்வா
மூவர்களேத்தும் முத்தேமணியே
சரவணபவனே சற்குருநாதா
அரவணை துயிலும் அரிதிருமருகா
சித்திரமயில்மேல் சிறந்திடுகுகனே
பத்தியாய்உன்மலர்ப் பாதம்பணிந்தேன்
கும்பமுனிவன் கோருநக்கீரன்
அம்புவிமதிக்கு மருணகிரிபோல்
பதிதனில்உந்தன் பத்திமேற்கொண்டு
கதறிடும்என்முன் கருணைசேர்குருவாய்
விதிதனைவென்றேய் விரைந்தெனைக்காப்பாய்
மதிதருமுந்தன் மலரடி போற்றி
நித்தியமுன்னை நேமகமாக
பத்தியே கொண்டு பணிந்திடுவகையும்
புத்திரமித்திர களத்திர முதலோர்
கர்த்தன்நின் அருளால் களிதருவாழ்வுற
வாதம் பித்தம் வருத்திடும் சேத்மம்
பேதம் அறிந்து பிணிதனை நீக்க
மந்திர ஔடதம் வகை வகையான

தந்திரசித்தியும் தானெனக் கருள்வாய்
மாற்றார் பகையும் வஞ்சகர் கோளும்
கூற்றேன்செயலும் குற்றமு மணுகா
தாதரித்திடுவீர் ஐயனே போற்றி
போதமெய்ஞ்ஞான பொருளே போற்றி
நாதனே விண்ணோர் நாயகா போற்றி
வேதனை தீர்க்கும் வித்தகா போற்றி
கூர்வடிவேலா குமரா போற்றி
சீர்பெறுமடியார் தேவே போற்றி
ஐயனே போற்றி ஆதியே போற்றி
மெய்யனே போற்றி வேலவா போற்றி
துய்யனே உந்தன் துணையடி போற்றி
பையாவணிந்தோன் பாலகா போற்றி
சரணம் சரணம் சற்குரு நாதா
சரணம் சரணம் சண்முகா சரணம்.

சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க.

# கந்தபுராண சரித்திரக் கும்மி

(பின்முடுகு)

கும்மியடிப் பெண்கள் கும்மியடி—உங்கள்
கொண்டையுந் தண்டையும் தாங்குலுங்க—ஓம்
குகனே சண்முகனே
தற்பரனே வேற்கரனே எனக்
கோரி குமமியடியுங்கடி—அன்பு
மீறி கும்மியடியுங்கடி. (கும்)

ஐந்து கரத் தோனடி போற்றி—அன்னை
அம்பிகை, தற்பரன் தாள் போற்றி—நிறை
அருள் மாதவர் தவயோகியர்
அடிபோற்றியே முருகன் புகழ்
அதனைக் கும்மியாய்ப் பாடலுற்றேன்—என
தையன் திருவடி நாடலுற்றேன். (கும்)

ஆதியில் வானவர் தானவர் தங்களுக்
கஞ்சியே நெஞ்சம் மிகப் பதறி
அரனரிடந் தனி லோடியே
சரணகதி தனை நாடியே
அபயம் அபயம் என்றே தொழுதார்—அவர்
அங்கம் பதறியே தானழுதார். (கும்)

அபயமென விண்ணோர் வந்த விவரம்
அறியச் சொல்வீர் என்றார், நீலகண்டன்
அகம்பாவங் கொண்டுழல் தானவர்
நெறியின்றி எங்களை வாட்டுரூர்
அத்தனே உன்னருட் தாருமென்றூர்—பரி
சுத்தனே எங்களைப் பாருமென்றூர். (கும்)

தாருகன் சூரனும் சிங்கமுகனெடு
சௌரிய கஜமுகன் பானு கோபன்
தனல் மாமுகன் முதல் தானவர்
இமையோர்களைச் செயும் வேதனை
சங்கரனே கேட்டருளு மென்றார்—எங்கள்
அய்யனே உன்னருள் தாரு மென்றார். (கும்)

அக்கினி அட்டடல் தொழில் புரிந்தான்—அடல்
ஆதித்தன் தானியம் காயவைத்தான்
அடல்வாயு சாமரை வீசினன்
வருணன் பன்னீர் சிந்தினன்
அரம்பைய ரோபணிப் பெண்ணுனர் தேவர்
அடல் குன்றியே வெறும் மண்ணுனர். (கும்)

ஏமனும் வந்து குற்றேவல் செய்தா—பிற
இமையோரும் சென்றங்கு மீன் பிடித்தார்
தேவேந்திரன் மனமேங்கிட
திருமால் உளம் மிகவாடிட
எங்கும் அவர்களின் அக்கினையே—அதற்
இணங்கவிலை எனில் போர் முனையே. (கும்)

இப்படியாக அசுரரால் எங்களுக்
ஏற்படும் மாபெரும் இம்சைகளால்
இடர்பட்டிடல் அழகாகுமோ
முடிவில்லையோ கொடுமைக் கெலாம்
எந்தையே காத்தருள் எம்மை என்றார்—எங்கள்
தந்தையே உம்மருள் தாரு மென்றார். (கும்)

ஆதிசிவனும் அதைக் கேட்டு நெஞ்சில்
அடங்காப் பெருங் கோபமுண் டெழவே
அழல்சிந்திடும் நுதற்கண் விழித்
தறுதிப் பொறிதமை சிந்தினர்
அண்டர்கள் கண்டு மனமிடிந்தார்—எரி
அழலவனும் உளமஞ்சி நின்றார் (கும்)

தேவர்கள் மீண்டு எதிர் நோக்கி—அந்தோ
சிவமே இதென்ன அநியாயம்
சினமே தணித்தெமை காத்திடும்
மனமே உவந்தருள் செய்திடும்
சேயர்மீது அருள் சுரப்பீர்—இந்த
தீமையைப் போக்க வழிவகுப்பீர். (கும்)

அஞ்சாதீர் அஞ்சாதீர் தேவர்களே—இனி
அத்தீப் பொறிகளால் உங்களுக்கு
அணுகுந் துயரது ஒன்றிலை
அசுரர்தமை பொடியாக்கிட
ஆறுமுகன் வந்தவரிப்பான்—உங்கட்
கான துயரம் தனைத் தவிர்ப்பான். (கும்)

இப்பொறிகள் தமை நீங்களுமே ஏந்தி
இமையமலைச் சாரல் உள்ள தொரு
எழில்சேர் சரவணப் பொய்கையில்
இடுவீரென அரன் சாற்றிட
இமையவர் கேட்டு மன்மகிழ்ந்தார்—மன
ஏக்க மொழிந்தே அடிபணிந்தார். (கும்)

வன்னியும் வாயுவும் தீப் பொறிகள் தமை
வாரியே பொய்கையில் விட்டவுடன்
வளமே பெரும் சுரர் யோகியர்
உளமே பெரு மகிழ் பெற்றிட
மாசிவ சண்முகன் வந்துதித்தார்—எங்கள்
வாழ்வு மலர்ந்ததென் அண்டர் சொன்னார். (கும்)

தேவர்கள் வந்து மலர் சொரிய—தர்ம
தேவதை கண்டு மனமகிழ
திருமாலரன் திசைமாமுகன்
திகழ் வாணி லக்குமி பார்வதி
செய செயவென் றெதிர் வாழ்த்தலுற்றார்—தங்கள்
சித்தம் மகிழ்ந்தே ஆசீர்வதித்தார். (கும்)

அந்தர துந்துமிதான் முழங்க—ஐயன்
ஆறுசிறிய குழந்தைகளாய்
அமையக் கார்த்திகை மாதர்கள்
அகமே மிக மகிழ் பெற்றிட
அன்புடனே விளையாட லுற்றார்—வீணை
தும்புரு நாரதர் பாடலுற்றார். (கும்)

அன்னை அம்பிகை அவையே நோக்கி—மலர்
அங்கையா லொன்றாகவே சேர்த்து
அகிலத்தவர் சுக முற்றிட
அசுரர் மிக துயருற்றிட
ஆசீர் வசனங்களைப் புகன்றார்—வெகு
ஆனந்த முற்றே மனம் பரிந்தார். (கும்)

ஆறுமுகமும் ஈராறுகரங்களும்
ஆக்கை ஒன்றுமிரு கால்களுமாய்
அங்கத்தினை நிறை செய்துமே
கொங்கை திரு வமுதீந்தனள்
ஆறுமுகனுண் டகமகிழ்ந்தார்—தன
தன்னையின் மார்பினிலே தவழ்ந்தார். (கும்

சரவணன் சண்முகன் கார்திகேயன்—புகழ்
தங்கும் விசாகன் முருகனென்றும்
தகுநற் பெயர்களை சூட்டியே
ஜகமேல் புகழ்தனை நாட்டியே
சத்திவடிவேல் கரத்தளித்தாள்—சிவ
சங்கரி உள்ளம் மிகக் களித்தாள். (கும்)

தாய்தந்தையர் தம்முன் சண்முகனூர்—மிகச்
சந்தோடமாக விளையாடி
தகுவானவர் மிக வாழ்த்திட
பெருயோகியர் தொழுதேத்திட
தக்கச்சிறுதேர் உருட்டி நின்ருர்—அருள்
மிக்க விளையாடல் ஆடலுற்ருர். (கும்)

சங்கரன் தன்னைப்பணிந்து நின்ற வேதன்
சண் முகனைப் பணியா திருக்க
தழல்வேற்குகன் சினமிஞ்சியே
அயனூர் மனமது வஞ்சுட
தத்துவ மூலப்பிரணத்தின்—உரை
சாறுக வென்றனர் அக்கணத்தில். (கும்)

கூறுமல் நின்று திகைத்திட்ட வேதனை
குட்டியேயையன் சிரை யடைத்தே
குறியாய் அவன்தொழில் தன்னையும்
திறனுடைவர் செயுநாளினில்
கூற்றை உதைத்தோர் ஆங்குற்றனராம்—மைந்தர்
கோபம் தணிந்திட சொற்றனராம். (கும்)

பூமனும் காணுப் பிரணவத்தின் பொருள்
புத்திரனே இங்குரைப்பாய் என
புவி மீதினில் அமரவாய்என
தவயோகியர் பணிதற்பரன்
பதுமாசன மிட்டுத் தானமர்ந்தார்—எங்கள்
பண்ணவன் சற்குருவாகி நின்றான். (கும்)

பீடத்தின் மீதில் இனிதிருந்தேகுகன்
பிஞ்சகன் காதில் பிரணவத்தை
பரிவாகவே உரைசெய்திட
குருவாகவே மனமேற்றுமே
கொண்டாடி மைந்தன் தனைப்புகழ்ந்தார்—அதைக்
கண்டதே அன்பர்மனமகிழ்ந்தார். (கும்)

நான்முகன் தன்னைச் சிறைநீக்கியவன்
நாடியே போற்ற எதிர்நோக்கி
நலமாய்த் தொழில் புரிவாய் என
சிலை வேலவன் விடை ஈந்தனன்
தேவரும் மூவரும் தான்புகழ்ந்தார்—சாமி
நாதன் இவனென்று தான் மகிழ்ந்தார். (கும்)

நவசக்திகள் ஈன்று நற்புகழ் பெற்ற
நவவீரரோடு லக்ஷத்தெண்மரும்
நம்பன் உரைப்படிவந்துமே
நாளுங் குகன் அருள்பெற்றிட

ஞாலமீதோன்றுய் விளையாடி—உளம்
நன்ருனுர் ஒன்ருக தாங்கூடி. (கும்)

மேகங்கள் தம்மைப் பிழிந்திடுவார்—திக்கு
மேவுங்கஜங்களை ஓடவைப்பார்
மல்லேபுரிந்திடு வானவர்
சொல்லாமலே புறங்கண்டுடல்
சோர்ந்து பலவித மோடலுற்ருர்—தங்கள்
தூயகுருதனை நாடலுற்ருர். (கும்)

கண்டவியாழன் மனங்கலங்கி—ஐயன்
கழலடி போற்றி எதிர்நோக்கி
கதிதந்துமே சுரர் தங்களை
நிதிபெற்றினி துறச்செய்குவீர்
கர்த்தனே குற்றம் பொறுத்தருள்வீர்—எங்கள்
அத்தனே நல்ல அருள்தருவீர். (கும்)

அசுரரை வென்றே அடக்கிடவும்—தேவர்
ஆனந்த முற்றுச் சுகித்திடவும்
அரனுர் மகிழ் தருள் சண்முக
சரணுக்தி தமை நம்பிேனும்
ஆதரித்தே எமைக் காத்திடுவீர்—அந்த
அவுணர்தம் வாதையைப் போக்கிடுவீர். (கும்)

சண்முகன் கண்டு மனமுவந்து வாரேனுர்
தங்களைக் காத்திடு நோக்கமுடன்
தடமீதினில் இடர்செய்திடும்
கொடுராக்கதர்களின் வண்மையைக்
கூறுமென்றன்புடன் கேட்டறிந்தார்—கொடும்
போரினுல் வென்றிடவே துணிந்தார். (கும்)

பராசபுதல்வர்கள் தாம்வணங்க—அவர்
பாபமகற்றிப் பதமனித்துப்
பற்றுங் கதிர் வடிவேலவன்
வெற்றிப்பெற தவ நாரதர்
பரியாக மேடந்தனை யளித்தார்—குகன்
பாரித்தே வாகனமாகக்கொண்டார். (கும்)

தேவர்தம் தச்சன் அயனுல் நிருமித்த
சிங்காரக் கோயில்தனிலமர்ந்து
சித்தம் மகிழ் திருத்தம்பியை
திறல் சூரனின் உளம்கண்டிட
தீரமாய் தூதாய் அனுப்பி வைத்தார்—பல
சேதிகள் செப்பும்படி விடுத்தார். (கும்)

வீரவாகு தேவர்த் தூதின் மொழிகளை
வீணனும் சூரன் மறுத்துரைக்க
விளைபோரினில் உனையும் உயிர்
தனை நீங்கிடக் காப்பீரென
மேவிக்கந்தனடி போற்றிசெய்தார்—சூரன்
தாவில் மொழிகளைக் தானுறைதார். (கும்)

நவவீரர் தம்மோடும் லக்ஷத்தெண்மரொடும்
நால்வகை பூதப் படையோடும்
நலமாகவே புறஞ் சூழ்ந்திட
சிலே வேலுடன் சிவசண்முகன்
தண்கடலின் கரைத் தானடைந்தார்—ஆழி
தன்னைக் கடந்திடும் நோக்கமுற்றார். (கும்)

தண்டுத் தளமும் கடல்தாண்டி சூரன்
தன் நகர் சென்று கூடாரமிட

தனைக் கண்டதே மனமஞ்சியே
சமர் சூரனும் பலமாகவே
தன் நகர்த்தன்னையே காவலிட்டான்—வீரர்
தன்னை எங்கெங்கும் வரிசையிட்டான். (கும்)

யுத்தமுரசம் முழக்கிவிட்டான் ஐயன்
உற்றுப் பெருமலையாய்த்தடுத்த
ஓங்குங்கிர உஞ்சன் உடல்
ஆங்கே இரு பிளவாய் விழ
ஒண்கதிர் வேலை வாங்கி விடுத்தார்—அவன்
உயிரற்று வீழவேதான் முடித்தார். (கும்)

சூரனுங் கண்டு மனங்கலங்கித் தம்பித்
துன்முகன் சிங்கன் கஜமுகனை
சுதனுகிய ரவிகோபனை
உடன்சூழ் பல சூரர்களை
சூழ்ந்து சமர்செய்யத்தான் விடுத்தான்—ஆவி
சோர்ந்து அவரெல்லாம் தாம்மடிந்தார் (கும்)

ஓங்கிச் சமர்செய் தெதிர்த்தவரை எல்லாம்
உத்தமன் வேல் கொண்டழித்திடவே
உடல் குன்றியே நெடுந் தானவன்
அடமாகமே பல ரூபங்கள்
உற்று ககனத்துப் போர்புரிந்தான்—தான்
கற்றவித்தை எல்லாம் காட்டி நின்றுன். (கும்)

மாயரூபங்களை மாய்த்து விட்டே ஐயன்
மன்னுங் கதிர் வடிவேல் விடுக்க
மதமே ஒழி கொடு சூரனும்
இதமே பெற கடல்தன் கரை
ஏகியே மாமரமாய்ச் சமைந்தான்—இனி
ஏது செய்வேன் என்று தான் அழுதான். (கும்)

சத்திவடிவேலு பின் தொடர்ந்தே—அந்தத்
தானவனுகிய மாமரத்தை
சதமாகவே இருகூறுற
இதமாய் செய மதமற்றுமே
சேவலுடன் மயிலாய்ப் பணிந்தான்—ஐயன்
சேவடிக்கன் புறவே துணிந்தான். (கும்)

செங்கல்வராயன் மனமகிழ்ந்தே திருச்
சேவல்தனைக் கொடியாயமைத்து
செகமே புகழ்ந்திட மாமயில்
தனை வாகன மாகக்குகன்
தான்கொண்டா ரன்பர் கடைதேற—ஆட்டை
தந்தார் அழலோன் மகிழ்கூற. (கும்)

வாகனமாய் மேடந் தன்னைப் பெற்றவுடன்
வன்னியுங் கந்தன் அடி பணிந்தான்
வற்றுதவ முற்றோர்களும்
வடிவேலவன் புகழ்பாடியே
வண்ணமலர்களைத் தான் சொரிந்தார்—ஐயன்
மாபுகழ் பாட மிக விரைந்தார். (கும்)

அண்டர்கள் துந்துமி தான் முழங்க—வான்
அரம்பையர் நாட்டிய மாடிவர
அரும்யோகியர் சித்தர்களும்
நறுமாமலர் பல தூவியே
அரகரா வென்றெதிர் போற்றி செய்தார்—அன்பர்
ஆனந்த நிர்த்தனம் ஆடலுற்றார் (கும்)

தேவர்த் தலைவன் மனமகிழ்ந்து—மகள்
தெய்வானை தன்னை முருகனுக்குத்

திறமாய்த் திருமணம் செய்துமே
அருள் சேர் புகழ் பல சாற்றியே
தேவ சேனுபதியாய் அமைத்தான்—எங்கள்
தினதயாளன் மனமகிழ்ந்தார். (கும்)

அமரர்க் கதிபதி இந்திரனிடம் வேலன்
அன்பாய் விடை கொண்டு தேவியுடன்
அகிலத்தவர் அகமுற்றிட
அருள்சேர் திருத்தணிகை தனில்
அன்புடன் வந்தே அமர்ந்திருந்தார்—தொண்டர்க்
கான வரங்களைத் தானளித்தார் (கும்)

வேள்விமலை யிடைச் சிற்றூராம் அங்கு
வேடரிடத்தில் வளர்ந்திருந்த
வள்ளித்தனை உள்ளத்தினில்
கள்ளத் திருமணம் கொண்டனன்
காங்கேயன் மெத்தக் களித்திருந்தான்—அரன்
கண்டு திறத்துடனே மகிழ்ந்தான். (கும்)

தெய்வானை வள்ளி சமேதனுமாய்—ஐயன்
சேவற் கொடிமயில் வேல் துலங்க
தணிகாசல மதிலே புவி
அடியார்களின் துயர் போக்கிட
சைதன்ய மாகவே தானமர்ந்தார்—வேலன்
ஐவகை வெற்றியும் தானடைந்தார். (கும்)

வைப்புகழிப்பு முறைப்படும் பல
வஞ்சகர் சூனியம் ஏவல்களும்
மாறும்படி தீரும் அருள்
தாரும் எனப் பாருற்றவர்

மலை யேறிப் போற்றிப்பணித்து நின்றார்
அங்கு மாவிளக்கேற்றி மகிழ்ந்து நின்றார். (கும்)

திராவினைகளைத் தீர்த்து வைப்பார் ஐயன்
ஜென்ம சாபல்யமும் ஆக்கிவைப்பார்
திருவின்புகழ் மருவும்படி
உறுதிப் பெற மலர்க்காவடி
தேசதேசத்தவர் கொண்டோடி—வந்து
சேவித்து நின்றார் புகழ்பாடி. (கும்)

கலியுகந் தன்னிலே கண்கண்ட தெய்வமென்
கந்தப் பெருமானென மதித்து
கதியுங் கன நிதியும் பெரு
மதியும் பெறதுதி பாடியே
காசினியோர்கள் களித்தனரே—பூசை
காப்பிட்டுப் பற்பலர் போற்றினரே. (கும்)

விண்ணவர் மண்ணவர் தாம் வாழ்க—அருள்
வேதவிதியின் நெறிவாழ்க
வேலாயுதன் பாமாலையே
மேவுத்தமிழ் தனிலோதியே
வேலன் அடிகளில் சூட்டுகிறேன்—என்னை
மேவும் வினைகளை ஓட்டிவிட்டேன். (கும்)

முற்றும்.

சிவ ஷண்முக மெஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க.

அடுத்து வருபவை :—

(1) பாரசீக மகாகவி

கலீல் இப்ரான் இயற்றிய

## களிப்புங் கண்ணீரும்.

தமிழாக்கம் திரு. சகதீசன் ஆ. மா.

(2) ஆங்கில மகாகவி

டெனிசன் இயற்றிய

## உடைந்த உள்ளம்.

(காவியம்)

தமிழாக்கம்: நலங்கிள்ளி

விவரங்களுக்கு :

**திருவள்ளுவர் நிலையம்**

மேட்டுத் தெரு,

சுவால்பேட்டை, அரக்கோணம்.

பெரியநாயகி அம்மன் அச்சகம், சூளை, சென்னை-7.